பக்கங்கள்:-18

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆனி 12 | புதன்கிழமை | 28.08.2024 | அதிர்வு 026 |
|---|---|---|---|---|---|

## கருத்துக்கணிப்பின் பிரகாரம் ரணில் - சஜித் இடையே போட்டி

### மூன்றாம் இடத்தில் அநுர



"வரும் ஜனாதிபதித் தேர்தலில் இதுவரை உள்ள கருத்துக்கணிப்புகளில் 05

# போர்க்குற்றவாளிகளை எனது அரசு தண்டிக்காது!

## அநுர வெளிப்படைக் கருத்து



"இலங்கையின் 26 வருடகால உள்நாட்டுப் போரின் போது போர்க்குற்றச்சாட்டுகள், மனித உரிமை குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள எவரையும் எனது நிர்வாகம் தண்டிக்க முயலாது."

- இவ்வாறு ஜே.வி.பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். 05



# தமிழர்கள் இனியும் ஏமாறத் தயாரில்லை

## அதன் வெளிப்பாடாகவே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றேன் என்கிறார் அரியநேத்திரன்

"வடக்கு - கிழக்கு தமிழர்கள், இலங்கை அரசிடம் - ஜனாதிபதிகளிடம் இனியும் ஏமாறத் தயாரில்லை. அதன் வெளிப்பாடாகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகப் போட்டியிடுகின்றேன்."

- இவ்வாறு தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தெரிவித்தார். 05

## காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் இன்று இந்தியத் தூதரகத்தினரிடம் கையளிப்பு



(ந.லோகதயாளன்)

கடலில் மூழ்கிய இந்திய மீன்பிடிப் படகில் இருந்து காப்பாற்றப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் இன்று இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

தமிழகத்தின் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கப் புறப்பட்ட ரோலர் விசைப்படகில் நான்கு மீனவர்கள் பயணித்தபோது இந்திய எல்லைக்குள் கச்சதீவுக்கு அண்மையாக நேற்றுக் காலை விசைப்படகு உடைந்து கடலில் மூழ்கியுள்ளது.

அந்தப் படகில் இருந்த நான்கு மீனவர்களில் இரண்டு மீனவர்கள் கச்சதீவை அடைந்த போது இருவரும் இலங்கைத் 05




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு மீண்டும் வரும் ஞாயிற்றுக்கிழமை முதலாம் திகதி - நல்லூர்த் தேர்த் திருவிழாவன்று - காலை 10:30 மணிக்கு வவுனியாவில் கூடுகின்றது.

வரும் கிழமை ஜனாதிபதித் தேர்தலின் தபால் மூல வாக்களிப்பு இடம்பெறப் போகின்றது.

அதற்கு முன்னர் தமிழரசுக் கட்சி கூடுகின்றது - ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கு.

இத்தேர்தலில் முக்கியமான மூன்று வேட்பாளர்களில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுர குமார திஸநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் வெளியாகிவிட்டது. மற்றைய இருவர்களான ஜனாதிபதி 05

# அநுரவின் விஞ்ஞாபனத்தை விளாசித் தள்ளினார் ரணில்

## தமது விஞ்ஞாபனம் நாளை வெளியிடப்படும் என்றும் தெரிவிப்பு

அனைத்து மக்களுக்கும் சிறந்த வாழ்க்கைத் தரத்தை உருவாக்கும் தொலைநோக்குப் பார்வை கொண்ட புதிய இலங்கையைக் கட்டியெழுப்பும் திட்டம் உள்ளடக்கிய தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நாளை வியாழக்கிழமை நாட்டுக்கு முன்வைப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இளைஞர்களுக்கு பாதுகாப்பான இலங்கையை உருவாக்கும் வேலைத்திட்டம் அதில் உள்ளடங்குவதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மாவனல்லை பஸ் நிலையத்திற்கு அருகில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில், நாடு எதிர்நோக்கும் சவால்களை வெற்றிகொள்ள தொங்கு பாலத்தின் பயணம் தொடர வேண்டும் எனவும், தொங்கு பாலம் வெட்டப்பட்டால் ஆற்றில் விழ நேரிடும் என்ற உண்மையை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின்படி, வரி வருமானம் குறைக்கப்பட்டால், அரச வருமானம் 200 பில்லியனுக்கு மேல் குறையும் என்றும், அவர்கள் கூறுவது போல், பொருட்களின் விலையை குறைக்கவும் முடியாது என்றும், அரச வருமானத்தைக் குறைத்து, செலவினங்களை அதிகரித்து பொருளாதாரத்தை எவ்வாறு பேணுவது என்ற கணிதப் பிரச்சினையை அவர்கள் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில்,

"இதற்கு முன்னர் மாவனல்லையில் ஐ.தே.க. மேடைகளில் நான் உரையாற்றியுள்ளேன். இன்று சகலருடனும் பேச வந்துள்ளேன். நாடு நெருக்கடியான சூழலில் இருக்கையில் கட்சியை மறந்து நாட்டைப் பற்றி சிந்தித்து செயற்படுமாறு எமது தலைவர் ஜே.ஆர்.ஜெயவர்தன எமக்குக் கற்பித்துள்ளார். 1971 இல் ஜே.வி.பி. கலவரத்தின்போது ஜனநாயகத்தைப் பாதுகாக்க அரசுக்கு ஒத்துழைப்பை வழங்குவதாக ஐ.தே.க. தலைவர் அறிவித்தார். ஜே.ஆர். ஜெயவர்தனின் புதல்வர் கைதாகியிருந்தார்.அந்தப் பிரச்சினையை பின்னர் தீர்க்கலாம் என அவர் தெரிவித்தார். 1989 ஜே.வி.பி. கலவரத்தின் போது சிறிமாவோ அம்மையார், பிரேமதாஸவைச் சந்தித்து ஒத்துழைப்பு வழங்குவதாக அறிவித்தார். பிரேமதாஸ கொல்லப்பட்டபோது நாட்டை ஸ்தீரப்படுத்த உங்கள் தரப்பில் இருந்து ஜனாதிபதி ஒருவரை நியமிக்குமாறு சிறிமாவோ அம்மையார் கோரினார்.

அன்று நாடு நெருக்கடியாக இருந்தபோது கட்சிகள் அவ்வாறு இணைந்து செயற்பட்டன. இன்று எம்முடன் பொதுஜன பெரமுன, சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என அனைத்துக் கட்சிகளும் உள்ளன. ஜே.ஆர்.ஜெயவர்தன, ஆர்.பிரேமதாஸ ஆகியோரை பின்பற்றினால் கட்சி அரசியலுக்கு அப்பால் நாடு குறித்து சிந்தித்து செயற்படலாம்.

நான் வேறொரு கட்சியில் இணைந்துள்ளதாக யாராவது சொன்னால் அது தவறு. ஏனைய கட்சியினர் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்று சொல்வேன். எதிர்க்கட்சித் தலைவர்தான் மாற்று பிரதமர். ஐ.தே.க. அங்கத்தவராக இருந்திருந்தால் 2 வருடங்களுக்கு முன்னர் பிரதமர் பொறுப்பை சஜித் ஏற்றிருக்க வேண்டும். அவர் ஏற்கவில்லை. ஏற்காவிட்டால் அவர் ஐ.தே.கவைச் சேர்ந்தவரல்ல.

அன்று காஸ், எரிபொருள், மருந்து வரிசை இருந்தது. வன்முறை வெடித்தது. அனைவரும் கஷ்டப்பட்டனர். எத்தனை மணிநேரம் வரிசையில் இருந்தீர்கள்? அனைவரும் வழங்கிய ஒத்துழைப்பினால் நாம் இணைந்து நாட்டை மீட்டோம். நாம் பொருளாதார ஸ்தீர நிலையை நோக்கிச் செல்கின்றோம். வாழ்க்கைச் செலவு குறைந்துள்ளது. அந்தச் சுமையை மேலும் குறைக்க எதிர்பார்க்கின்றோம். வருமானத்தை அதிகரிக்க வேண்டும். புதிய தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். ஏற்றுமதி வருமனத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுத்து வருகின்றோம். எதிர்காலம் குறித்து சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

நாம் இதுவரை பயணித்த பாதையில் தொடர்ந்து செல்ல




வேண்டும். அந்தப் பாதையில் இருந்து விலக முடியாது. வரி அறிவிடுவதை நிறுத்துவதாக சிலர் செல்கின்றனர். தொங்கு பாலத்தை வெட்டி விட்டுச் சென்றால், ஆற்றில் தான் விழ நேரிடும்.

ஜே.வி.பி.யின் விஞ்ஞாபனத்தின் பிரகாரம் குறைந்த பட்சம் 200 பில்லியன் ரூபாவுக்கு மேல் வருமானம் குறையும். வரி வருமானம் குறைந்தால், எப்படி செலவுகளை அதிகரிக்க முடியும். அந்தப் பொருளாதாரக் கணக்கு தெரியாமல் தொங்கு பாலத்தின் இரு பக்கங்களையும் வெட்டி விடத் தயாராகிறார்கள்.

232 பக்கங்களுடன் கூடிய விஞ்ஞாபனத்தை நேற்று வாசித்தேன். அதனை அனைவரும் படிக்க வேண்டும். அதற்கு ஓரிரு மாதங்கள் செல்லும். ஆனால் 21 ஆம் திகதி வாக்குச் சாவடிக்குச் சென்று காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். தொங்கு பாலத்தை கைவிடாமல் தான் நாம் இந்தப் பயணத்தை செல்ல வேண்டும்.

பொருளாதார ஸ்தீரத்தன்மையை ஏற்படுத்தி, அதன் பயனை உங்களுக்கு வழங்க வேண்டும். அதனால் தான் 5 வருடங்களில் பொருளாதாரத்தை ஸ்தீரப்படுத்தி ஏற்றுமதி வருமானத்தை உயர்த்தி, அடுத்த வருடம் முதல் உணவுப் பொருட்களின் விலைகளைக் குறைப்போம். தொழில் வாய்ப்புகளை உருவாக்குவோம்.

வருமானம் அதிகரிக்கும் போது வரியைக் குறைப்போம். உறுமய, அஸ்வெசும என்பவற்றை தொடர்வோம். இது தான் எனது திட்டம். பொருளாதார முகாமைத்துவத்தை ஏற்படுத்தி வருமானத்தை அதிகரிப்பதோடு பொருட்களின் விலைகளைக் குறைக்கலாம். அடுத்த வருடம் முதல் படிப்படியாக வரியை குறைப்பது குறித்து சிந்திக்க முடியும். தற்பொழுது அதனை செய்ய முடியாது. பருப்பு, சீனி, எரிபொருள் விலைகள் தற்பொழுது குறைந்துள்ளன.

அவற்றை மேலும் குறைக்க வேண்டும். புதிய வருமான வழிகள், பொருளாதார முன்னேற்றத்துடன் முதலீடுகள் அதிகரித்தால் வரிச் சுமையைக் குறைக்கலாம். சுற்றுலா பயணிகள் அதிகரித்து, கைத்தொழில்கள் உருவாகும் போது வருமானம் உயரும். விவசாய நவீன மயமாக்கலுடன் பொருளாதாரம் உயரும்.

பலமான பொருளாதார அடித்தளமொன்று ஏற்படுத்தியுள்ளோம். நிதி சார்ந்த 4 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஐ.ம.ச இன்றும் தமது கொள்கை என்ன என்று தெரியாதுள்ளது. ஒருபக்கம் ஹர்ஷ தனது கொள்கை என்று ஒன்றை சொல்கிறார். கொடஹேவா வேறொன்றை சொல்கிறார். எதிர்வரும் வியாழக்கிழமை (நாளை) எமது முழுமையான தொலைநோக்குடைய திட்டத்தையும் கொள்கைப் பிரகடனத்தின் ஊடாக அறிவிப்போம்.

புதிய இலங்கையொன்றை உருவாக்குவோம். உங்களுக்கும் புதிய இலங்கை ஒன்றை உருவாக்க வேண்டும். பொருளாதார முறையை மாற்ற வேண்டும். இளைஞர் கையில் பணம் இருக்க வேண்டும். நாம் இணைந்து முன்னோக்கிச் செல்வோம்.

விவசாய நவீனமயமாக்கலை டட்லி சேனாநாயக்கவிடம் இருந்துதான் கற்றேன். அதனை ஆரம்பிக்க வேண்டும். உங்கள் எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டும். இருப்பதை பாதுகாக்கப் போகின்றீர்களா? இருப்பதை அழித்துக்கொள்ளப் போகின்றீர்களா? 21 ஆம் திகதி காஸ் சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லையெனில், காஸ் சிலிண்டர் கிடைக்காமல் எனக்குக் குறை சொல்லாதீர்கள்." - என்றார்.




# உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தேர்தல்கள் ஆணைக்குழு ரத்துச் செய்ய முடியாது!

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்யும் அதிகாரம் தனக்கு இல்லை என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நிலுவையில் உள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆணைக்குழு இன்று கூடி கலந்துரையாடவுள்ளதாக அதன் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஆயிரத்தை கடந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.



# எக்சத் லங்கா பொதுஜனக் கட்சியின் நிர்வாகிகளின் விளக்கமறியல் நீடிப்பு

எக்சத் லங்கா பொதுஜன கட்சியின் செயலாளர் மற்றும் தவிசாளர் ஆகியோர் எதிர்வரும் 10 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி வேட்பாளர் ஜனக ரத்நாயக்கவிற்கு எக்சத் லங்கா பொதுஜன கட்சியின் உறுப்புரிமையை வழங்குவதற்காக 3 கோடி ரூபா லஞ்சம் கோரியமை தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி வழக்கு கொழும்பு பிரதம நீதி ல்வான் திலின கமகே முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சம்பவம் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள ஏனைய 6 சந்தேகநபர்களையும் பிணையில் விடுவிக்க நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.



# முன்னாள் ராஜாங்க அமைச்சர் டயனா கமகேவிற்குப் பிணை

நேற்று நீதிமன்றத்தில் முன்னிலையான முன்னாள் ராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரட்டை பிரஜாவுரிமையை கொண்டிருந்தமை உள்ளிட்ட 3 குற்றச்சாட்டுகளின் கீழ் சட்ட மா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் பிரதிவாதியான டயனா கமகேவிற்கு எதிராக திறந்த நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நிலையில் இவ்வாறு பிணை வழங்கப்பட்டுள்ளது.

25,000 ரூபா ரொக்கப்பிணை மற்றும் தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான 2 சரீரப்பிணைகளில் விடுவிப்பதற்கு கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன உத்தரவிட்டார்.

நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட அறிவித்தலுக்கு அமைய, பிரதிவாதியான டயனா கமகே தனது சட்டத்தரணியுடன் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலையாகியிருந்தார்.

# கடற்படைப் பணிக்குழாம் பிரதானி பதவிக்கு ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட நியமனம்

இலங்கை கடற்படையின் பணிக்குழாம் பிரதானியாக ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் கடந்த 16ஆம் திகதி முதல் அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

ரியர் அட்மிரல் காஞ்சன பானகொட இதற்கு முன்னர் கிழக்கு கடற்படை கட்டளைத் தளபதியாக பணியாற்றியிருந்தார்.














# “நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி”

**(எஸ்.நிதர்ஷன்)**

நம் நிலத்தடி நீர் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் கண்காட்சி யாழ்.நல்லூர் ஆலய முன்றலில் உள்ள யாழ். மாநகர சபை தீயணைப்புப் படை வளாகத்தில் ஆரம்பமானது.

யாழ். பல்கலைக்கழகத்தின் வடக்கு மாகாண நீர் பாதுகாப்புச் செயற்றிட்ட, இளைய நீர்த்துறையாளர் வட்டம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்களம், நீர்வளச் சபை உள்ளிட்ட பல்வேறு நீர் சார்ந்த அரச திணைக்களங்களும், அமைப்புகளும் இணைந்து பங்கேற்ற ”நிலத்தடி நீர் எங்கள் உயிர்நாடி” என்கின்ற தொனிப்பொருளிலான கண்காட்சி நேற்றுமுன்தினம் மாலை நல்லூரில் ஆரம்பமானது. இதில் பலரும் கலந்துகொண்டனர்.

அடுத்த மாதம் 4 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள இந்தக் கண்காட்சியில் நீர் சார்ந்த ஆய்வு விபரங்கள், விஞ்ஞான விளக்கங்கள், கலந்துரையாடல்கள், விளையாட்டுகள், இளையோர்கள் – சிறார்களுக்கான பரிசுப் போட்டிகள் எனப் பல வகையான நிகழ்வுகளும் இடம்பெறும்.







## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்கவும், எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் பெரும்பாலும் நாளை தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனவே, வரும் ஞாயிறன்று தமிழரசுக் கட்சி கூடும்போது, இனப்பிரச்சினையை அணுகுவது தொடர்பாக பிரதான வேட்பாளர்களின் நிலைப்பாடுகள் அவரவர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் மூலமாக ஓரளவுக்கு தெளிவாகியிருக்கும்.

எனினும் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் மத்திய குழுக் கூட்டத்தில் இந்தத் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்று தமிழ் மக்களுக்கு ஆலோசனை கூறும் ஓர் இறுதியான தீர்மானத்தை தமிழரசுக் கட்சி எடுக்காது என்றே தெரிகின்றது.

ஏலவே இப்பத்தியில் நான் சுட்டிக்காட்டியமை போன்று மாகாண சபை தேர்தல்களை நடத்துவதற்கான தேர்தல் சட்டமூலம் வரும் செவ்வாய்க்கிழமை மூன்றாவது – இறுதி – வாசிப்புக்காக நாடாளுமன்றத்துக்கு வருகின்றது. அது தாண்டும் வரை, அரசியல் தரப்புகளைப் பகைத்துக் கொள்வதைத் தவிர்க்கும் வகையில் தமிழரசுக் கட்சி தேர்தல் விடயத்தில் இறுதி முடிவு எடுக்காது என நம்பலாம்.

ஆயினும் வரும் ஞாயிறன்று நடைபெறும் மத்திய குழு கூட்டத்தில் இரண்டு விடயங்களை ஒட்டி தீர்மானங்கள் எடுக்கப்படலாம் எனத் தெரிகிறது.

ஒன்று – இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை ஞாயிறு கூட்டத்தில் தீர்மானமாக எடுக்காவிட்டாலும், பூர்வாங்கமாக – முதல் கட்டமாக – யாருக்கு வாக்களிக்கக்கூடாது என்று சில தரப்புகளைச் சுட்டும் தீர்மானத்தை தமிழரசு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் எடுத்து அறிவிக்கும் என எதிர்பார்க்கலாம்.

அடுத்தது – மத்திய குழுவின் தீர்மானத்தை மீறி, உதாசீனம் செய்து, தமிழ்ப் பொது வேட்பாளரை பகிரங்கமாக ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் பிரமுகர்களிடம் விளக்கம் கோரும் ஒழுங்கு நடவடிக்கை குறித்து ஞாயிறு கூட்டத்தில் தீர்மானிக்கப்படும் என மத்திய குழு உறுப்பினர்கள் நம்புகின்றனர்.

தமிழரசுக்கு வரும் ஞாயிறும், அதைத் தொடர்ந்து பிறிதொரு தினத்தில் நடக்கப் போகும் அடுத்த மத்திய குழுக் கூட்டமும் சிக்கல் நிறைந்தவையாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

\+ \+ \+

நேற்று என் பத்தியில் இறுதியில் – 'சட்டப்படி இந்த ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்திற்கு ஒரு வாக்காளருக்கு ஆகக் கூடியது 109 ரூபா பணத்தையே வேட்பாளர் செலவழிக்க முடியும். அதன்படி இலங்கை வாக்காளர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது ஒரு வேட்பாளர் ஆகக்கூடியது ஒரு கோடியே 80 லட்சம் ரூபாதான் பிரசாரத்துக்குச் செலவழிக்க முடியும்.'

– என்று குறிப்பிட்டு இருந்தேன். என் கணக்கில் ஒரு பிழை. அது சுமார் ஒரு கோடி 80 லட்சம் ரூபா அல்ல. சுமார் 180 கோடி ரூபா ஆகும்.

இந்தத் தவறை ஊடக நண்பர் ஒருவர் சுட்டிக் காட்டி இருந்தார். அவருக்கும் நன்றி.

## தமிழர்கள் இனியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு சார்பில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன், கிளிநொச்சி மாவட்டத்துக்கான தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்தார். இதன்போது உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்ததற்குப் பின்பு உரிமையை வலியுறுத்தி அஹிம்சையிலும் ஆயுத வழியிலும் போராடினோம். 2009 ஆம் ஆண்டு எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு இராஜந்திர ரீதியில் போராடுகின்றோம்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகள் 8 பேர் வந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆக இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசியிருக்கின்றோம். தீர்வு இல்லை. பேச்சுவார்த்தைகளின்போது ஏமாற்றப்பட்டோம். ஏமாற்றப்பட்டதன் வெளிப்பாடே இந்த முடிவு.

இனத்தின் வெளிப்பாடாகவே இந்தத் தேர்தல் அமைகின்றது. தமிழ் இனத்துக் காகப்பல்வேறு பொங்குதமிழ், எழுகதமிழ், பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான நடைபயணம் எனப் பல போராட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் முடிவு இனத்தின் முடிவாக இருக்க வேண்டும்." – என்றார்.

## கருத்துக்கணிப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணிலுக்கும் சஜித்துக்குமே போட்டி. ஜே.வி.பி. மூன்றாம் இடத்தில் உள்ளது."

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

"எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இதுவரைக்கும் மேற்கொள்ளப்பட்ட கருத்துக்கணிப்புகளில் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்குமே போட்டி இருக்கின்றது. மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்னதான் ஊடகக் களியாட்டங்களை நடத்தி, மக்களை ஒன்றுதிரட்டினாலும் அந்தக் கட்சியின் வேட்பாளர் அநுரகுமார மூன்றாவது இடத்திலே இருக்கின்றார். மக்கள் விடுதலை முன்னணியின் இவ்வாறான களியாட்ட நிகழ்வுகள் ரோஹன விஜேவீரவின் காலத்திலும் இருந்தன.

கடந்த முறை காலிமுகத்திடலை நிரப்புவதாகத் தெரிவித்து, யாரும் செய்ய முடியாத அளவுக்கு மக்களைத் திரட்டி காலிமுகத்திடலை அவர்கள் நிரப்பினார்கள். ஆனால், தேர்தலில் அவர்களுக்கு நூற்றுக்கு 3 வீத வாக்குகளே கிடைத்தன. அதனால் அவர்களின் கூட்டங்களுக்கு மக்கள் வருகின்றார்கள் என்பதற்காக அவர்களுக்கு மக்கள் வாக்களிக்கமாட்டார்கள்.

ஏனெனில் இந்த நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட மக்கள் விடுதலை முன்னணியின் கலவரமும் காரணமாகும். அவ்வாறான வரலாற்றைக் கொண்ட மக்கள் விடுதலை முன்னணிக்கு வாக்களிக்க மக்கள் முட்டாள்கள் அல்லர். அவர்களின் வரலாறு தெரியாதவர்களே அவர்களுக்கு வாக்களிக்கின்றனர். என்றாலும் அவர்களின் பொய் வாக்குறுதிகளை நம்பி இந்த முறை வாக்கு வீதம் அதிகரிக்கும் என நம்புகின்றோம். ஆனால், அவர்கள் எங்களுக்குச் சவால் இல்லை.

ரணில் விக்கிரமசிங்க இன்னும் தேர்தல் பிரச்சாரத்தை முறையாக ஆரம்பிக்கவில்லை. அவ்வாறு இருந்தே சஜித் பிரேமதாஸவுக்குச் சமமாக அமைந்துள்ளது. தேர்தல் பிரச்சாரத்தை ரணில் உரியவாறு ஆரம்பித்தால், சஜித்தும் எமக்குச் சவாலாகாது. நாங்கள் முன்னுக்கு வருவோம்." – என்றார்.

## காப்பாற்றப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடற்படையினரால் காப்பாற்றப்பட்டு யாழ். நெடுந்தீவுக்கு அழைத்து வரப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு இந்திய மீனவர்களும் இன்று குறிகட்டுவானுக்கு அழைத்து வரப்பட்டு இறங்குதுறையில் வைத்து யாழில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளனர்.

இதேநேரம் படகில் இருந்து காணாமல் போன மற்றைய இரண்டு இந்திய மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினரும் இந்திய விமானப் படையினரும் தேடி வருகின்றனர்.

## போர்க்குற்றவாளிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சர்வதேச ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கியுள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2022 இல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவியிலிருந்து அகற்றுவதற்குக் காரணமான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களுக்கு நானும் ஒரு வழிகாட்டியாக இருந்தேன்.

எனது நாட்டு மக்கள் மாற்றங்கள் குறித்து பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளனர். அவர்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். நாங்கள் அந்த மாற்றத்தின் முகவர்கள். ஏனைய அனைத்து வேட்பாளர்களும் பழைய, தோல்வியடைந்த, பாரம்பரிய முறைமையின் முகவர்கள்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியை அகற்றுவதற்கு அப்பால் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்கவில்லை. மாற்றங்களை ஏற்படுத்தக்கூடியவர்களாக அவர்கள் காணப்படவில்லை. இதன் காரணமாக மாற்றங்கள் குறித்த மக்களின் பெரும் விருப்பம் சாத்தியமாகவில்லை.

மக்கள் விரும்பும் மாற்றமாக எனது நிர்வாகம் காணப்படும். மக்கள் ஊழல் அற்ற சமூகத்தில் சிறப்பான பொருளாதாரத்தை எதிர்பார்க்கின்றார்கள்.

நாட்டின் வளங்களைத் தேசிய மயப்படுத்தும் கொள்கையை எனது கட்சி நீண்ட காலமாகக் கொண்டுள்ள போதிலும், நாங்கள் பொருளாதார சுதந்திரம், வெளிநாட்டு வர்த்தகம் ஆகியவற்றை ஏற்றுக் கொள்கின்றோம்.

பொதுமக்கள் மீதான சுமைகளைக் குறைப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ளும் அதேவேளை சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையைத் தொடர்ந்து முன்னெடுப்போம்.

06




# பொருளாதார சீர்திருத்தங்களை பாதுகாப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளதாக காண்பிக்க முயற்சி

## மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அறிக்கை

பொருளாதார சீர்திருத்தங்கள், மனித உரிமைகளை பாதுகாப்பதில் முன்னேற்றம் கண்டுள்ளமை தொடர்பில் சர்வதேச பங்காளிகளுக்கு காண்பிப்பதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிப்பதாக மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையின் அடிப்படை சுதந்திரத்திற்கு மேலும் அச்சுறுத்தல்கள் உள்ளன என ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகரால் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் இலங்கையில் வறுமை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் அறிக்கையை மேற்கோள்காட்டி மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் புள்ளிவிவரங்களின் பிரகாரம் இலங்கையில் மூன்றில் ஒரு பகுதியினர் உணவு பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை ஆராய்வதற்கும் சாட்சியங்களை சேகரிப்பதற்கும் பல்வேறு முறைகளின் ஊடாக ஏற்பட்டுள்ள தடைகளை ஆராய்ந்து சர்வதேச சமூகத்தின் தலையீட்டிற்கான தற்போதைய பிரேரணையை புதுப்பிக்குமாறு மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் தனது அறிக்கையில் சபையின் உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையின் அமர்வில், தற்போதுள்ள தீர்மானத்தை புதுப்பிப்பதற்கு மேலதிகமாக இலங்கை தொடர்பில் புதிய தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போர்க்குற்றவாளிகளை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

நாடு நிதி ரீதியாக வீழ்ச்சியடைந்து காணபட்டதாலேயே நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்படிக்கையைச் செய்தோம் என்பதால் நாங்கள் அதிலிருந்து வெளியேற முடியாது. ஆனால், மாற்றீடுகள் இருப்பதாக நாங்கள் நம்புகின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கையைத் தொடர்ந்து முன்னெடுக்கும்போது மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்து கவனம் செலுத்த வேண்டும்.

இலங்கையின் 26 வருட ஈவிரக்கமற்ற உள்நாட்டுப் போரின் போது மனித உரிமை மீறல்கள் – போர்க்குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட எவரையும் எனது நிர்வாகம் தண்டிக்க முயலாது.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து எனது அரசு விசாரணைகளை மேற்கொள்ள முயலும்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு எனது அரசு முயலும்.

பொறுப்புக்கூறல் விடயம் பற்றி தெரிவிப்பதென்றால் பழிவாங்கும் விதத்தில் அது இடம்பெறக்கூடாது. எவரையும் குற்றஞ்சாட்டும் விதத்தில் அது இடம்பெறக்கூடாது. உண்மையைக் கண்டறியும் விதத்திலேயே அது முன்னெடுக்கப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள் கூட எவரும் தண்டிக்கப்பட வேண்டும் என விரும்பவில்லை. அவர்கள் என்ன நடந்தது என அறியவே விரும்புகின்றார்கள்." – என்றார்.






# கிளிநொச்சியில் தமிழ்ப் பொது வேட்பாளருக்கு மக்கள் ஒன்றுதிரண்டு உணர்வுபூர்வ வரவேற்பு!

வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு சார்பில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் கிளிநொச்சி மாவட்டத் துக்கான தனது தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை நேற்று ஆரம்பித்தார்.

நேற்று பளை நகருக்கு வருகை தந்த அரியநேத்திரன், தமிழ்ப் பாரம்பரிய பறை மற்றும் மங்கள வாத்திய இசை யோடு வரவேற்கப்பட்டார்.

பெருந்திரளான மக்கள் கூடி நின்று அவரை உற்சா கமாக வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து பளை பஸ் நிலையத்தில் பிரச்சார நடவடிக்கையை அரியநேத்திரன் ஆரம்பித்தார்.

அங்கிருந்து இயக்கச்சி, ஆனையிறவு, பரந்தன், கிளி நொச்சி நகர் சென்று இரணைமடுச் சந்தியில் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது.


பளையில் நடைபெற்ற பிரச்சாரத்தில் தமிழ்ப் பொது வேட்பாளருடன் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்ன ணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அரசியல் ஆய்வாளர் ம.நிலாந்தன் உள்ளிட்டோர் கலந்துகொண்ட னர்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரினவாதி அநுர குமார

தேசிய இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பிலும் இன நல்லிணக்கம் தொடர்பிலும் சில முற்போக்கான கருத்து நிலைபாடுகளை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் நாசூக்காக முன் வைத்திருக்கின்றார் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸநாயக்க என்ற சாரப்பட இப்பதியில் குறிப்பிட்டிருந்தோம். ‘அநுராவின் சாமர்த்தியம்’ என்ற தலைப்பிலான அந்த ஆசிரியர் தலையங்கத்தை வரைந்த மை காய்வதற்குள் தமது சுய புத்தியை - பௌத்த, சிங்கள பேரினவாதத்தில் புதைந்த மனக் கருத்தியலை - அப்படியே வெளிக்காட்டி விட்டார் அவர்.

+ வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய பிரதேசங்களில் கடந்த காலத்தில் இடம்பெற்ற அரசியல் படுகொலைகள், காணாமல் போகச் செய்தல் மற்றும் ஆள் கடத்தல்கள் பற்றி புலன்விசாரணைகளை மேற்கொண்டு நீதியை நிலை நாட்டுதல் -

+ இவையும் மற்றும் மதத் தீவிரவாதம் காரணமாக இடம் பெற்றுள்ள வன்முறை சம்பவங்கள் குறித்தும் புலன்விசாரணை செய்வதற்கான உண்மை மற்றும் மீள் நல்லிணக்கத்திற்கான ஆணைக் குழுவின் செயற்பாட்டை விஸ்தரித்தல்.

- இவை போன்ற முன்னேற்றகரமான அம்சங்கள் அநுரகுமார திஸநாயக்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இருந்தமையை சிலாகித்திருந்தோம்.

ஆனால் அவையெல்லாம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வெளியிடப்பட்ட வெறும் பசப்பு வார்த்தைகள்தான் என்பதை அடுத்த 24 மணித்தியாலத்துக்குள்ளேயே அம்பலப்படுத்தி நிற்கின்றார் அவர்.

அசோசியேட்டட் பிரஸிற்கு வழங்கியுள்ள பேட்டியில் அவர் தமது உண்மை முகத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இலங்கையின் 26 வருடகால ஈவிரக்கமற்ற உள்நாட்டு யுத்தத்தின்போது யுத்தக் குற்றச்சாட்டுகள் மற்றும் மனித உரிமை குற்றச்சாட்டுகளிற்குள்ளாகியுள்ள எவரையும் தனது நிர்வாகம் தண்டிக்க முயலாது என அநுரகுமார திஸநாயக்க உறுதிபடத் தெரிவித்திருக்கின்றார்.

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் குறித்து தனது அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள முயலும் எனத் தெரிவித்துள்ள அனுரகுமார திஸநாயக்க பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு தனது அரசாங்கம் முயலும் எனவும் தெரிவித்துள்ளார்.

பொறுப்புக்கூறல் விடயம் பற்றி தெரிவிப்பதென்றால், பழிவாங்கும் விதத்தில் அது இடம்பெறக்கூடாது, எவரையும் குற்றம்சாட்டும் விதத்தில் அது இடம்பெறக்கூடாது, உண்மையைக் கண்டறியும் விதத்திலேயே அது முன்னெடுக்கப்படவேண்டும் எனத் தெரிவித்துள்ள அநுர குமாரதிஸநாயக்க, பாதிக்கப்பட்டவர்கள் கூட எவரும் தண்டிக்கப்பட வேண்டும் என விரும்பவில்லை. அவர்கள் என்ன நடந்தது என அறியவே விரும்புகின்றார்கள் எனப் புதிய விளக்கம் ஒன்றையும் கூறியிருக்கின்றார்.

பொறுப்புக் கூறல் என்ற அம்சத்திற்கு புது வியாக்கியானம் ஒன்றை முன்வைக்க முயல்கின்றார் போலும் அநுரகுமார திஸநாயக்க.

உண்மைகளைக் கண்டறிய முயல்வோம் - அதுவும் குற்றம் இழைத்தவர்களை கண்டிக்க மாட்டோம் என்ற முன்நிபந்தனையுடன்எனும்சாரப்பட அவர் கருத்து வெளியிட முனைவது மிகவும் கேலிக்கூத்தானது.

இடதுசாரிகள் என்று தங்களை அடையாளப்படுத்திக் கொள்ளும் இந்தப் போலி இடதுசாரிகள் தாங்களும் பௌத்த - சிங்கள பேரினவாதத்துக்குள் புதையுண்டு கிடக்கும் இன வெறிப் போக்காளர்கள்தாம் என்பதை இந்தக் கருத்தியல் மூலம் வெளிப்படுத்தி, நிரூபித்து நிற்கின்றனர்.

பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் இருண்ட மனக்குகைக்குள் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் அந்த பேரினம் புரிந்த யுத்தக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் பற்றிய உண்மைத் தன்மையின் பேரச்சம் ஆழப் புதைந்து கிடக்கின்றது என்பதை அநுராவின் இந்த கருத்து நிலைப்பாடு உறுதியாக வெளிப்படுத்தி நிற்பது கண்கூடு.



## கொல்கத்தாவில் மாணவர்கள் பேரணி:

# தடைகளை உடைத்த போராட்டக்காரர்கள் பொலிஸார் கண்ணீர்ப் புகை பிரயோகம்

மேற்கு வங்கத்தில் நேற்று நடந்த மாணவர்கள் பேரணியின்போது போராட்டக்காரர்கள் பொலிஸாரை நோக்கி கற்களை வீசியதாலும், ஹவுரா பாலத்தில் உள்ள தடுப்புகளை உடைத்ததாலும் பரபரப்பு ஏற்பட்டது.

தலைமைச் செயலகம் நோக்கி பேரணி சென்றவர்களைக் கலைக்க பொலிஸார் கண்ணீர் புகை பிரயோகம் மற்றும் தடியடி நடத்தினர்.

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் ஆர்.ஜி.கர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரவுப் பணியில் இருந்த முதுநிலை 2 ஆம் ஆண்டு பயிற்சி பெண் மருத்துவர் கடந்த 9 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டார். இந்த வழக்கு தொடர்பாக பொலிஸில் தன்னார்வலராக பணியாற்றிய சஞ்சய் ராய் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நிலையில், பெண் மருத்துவரின் கொலைக்குப் பொறுப்பேற்று மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி பதவி விலகக்கோரி மாணவர் அமைப்பு தலைமைச் செயலகம் நோக்கிச் செல்லும் பேரணிக்கு அழைப்பு விடுத்திருந்தது.

பேரணியில் வன்முறை நடக்க வாய்ப்பு உள்ளது என உளவுத்துறை எச்சரிக்கையைத் தொடர்ந்து 6 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். தலைமைச் செயலகத்தைச் சுற்றி மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் பொலிஸ் தடுப்புகளை மீறி மாணவர்கள், போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்னேற முயற்சித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

பேரணி தொடங்குவதற்கு முன்பாக, பெரிய அளவில் வன்முறை ஏற்படுத்தவும், கொலை மற்றும் கொலை முயற்சி சதி செய்ததாகவும் கூறி நான்கு மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என கொல்கத்தா பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

மாநில தலைமைச் செயலகத்துக்கு அருகே 20 நிலைகளில் பொலிஸார் இரும்பு மற்றும் அலுமினியத் தடுப்புகளை வைத்திருந்தனர். போராட்டக்காரர்கள் அதன்மீது ஏற முடியாத வகையில் அதில் எண்ணெய் தடவி வைத்திருந்தனர். போராட்டக்காரர்களின் நடமாட்டங்களை கண்காணிக்க ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்டன. கலவரத்தடுப்பு வாகனமான வஜ்ராவும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

பச்சிம்பங்கா சத்ரா சமாஜ் எனப்படும் ஒரு பதிவு செய்யப்படாத புதிய மாணவர் அமைப்பு இந்தப் பேரணிக்கு அழைப்பு விடுத்திருந்தது. ஆர்.ஜி.கர் மருத்துவனையில் பெண் பயிற்சி மருத்துவர் கொலை செய்யப்பட்டதற்கு பொறுப்பேற்று முதல்வர் மம்தா பானர்ஜி பதவி விலக வேண்டும் என்று அந்த அமைப்புக் கோரியது.

இந்த பேரணியை பா.ஜ.க. ஏற்பாடு செய்துள்ளதாகவும், போரட்டத்தின் போது வன்முறையைத் தூண்ட திட்டமிட்டிருப்பதாக திரிணமூல் காங்கிரஸ் கட்சி,குற்றம்சாட்டியுள்ளது.

திரிணமூல் காங்கிரஸ் கட்சியின் குற்றச்சாட்டை மறுத்துள்ள பா.ஜ.க, இந்தப் பேரணி பாரதிய ஜனதா கட்சியால் ஏற்பாடு செய்யப்படவில்லை, என்றாலும் பேரணிக்கு ஆதரவு அளிப்பதாக தெரிவித்துள்ளது.







# மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை தேவை

## மத்திய அரசுக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம்




இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழகத்தைச் சேர்ந்த 8 மீனவர்கள் இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழகம் முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கு நேற்று எழுதியுள்ள கடிதத்தில், இலங்கை அரசால் கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திடத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக முதல்வர் எழுதியுள்ள கடிதத்தில், “இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகில் மீன்பிடிக்கச் சென்ற 8 இந்திய மீனவர்கள் இலங்கை அதிகாரிகளால் ஓகஸ்ட் 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போது 116 இந்திய மீனவர்களும், 184 படகுகளும் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளது.

மீனவர்கள் இதுபோன்று தொடர்ச்சியாக கைது செய்யப்படும் சம்பவங்கள், மீனவர்களின் குடும்பத்தினரிடையே மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளதோடு, இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் வாழ்வாதாரப் பிரச்சினைகளை மேலும் மோசமாக்கியுள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரம் கடற்பரப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதுபோன்ற கைது நடவடிக்கைகள் மீனவர்களை மட்டுமல்லாமல், அவர்களை நம்பி வாழும் அவர்களது குடும்பத்தினரின் நல்வாழ்வையும் பாதிக்கிறது.

எனவே, இலங்கைக் காவலில் உள்ள அனைத்து மீனவர்களையும், இந்தியப் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்,” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

# அண்ணாமலையை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யக் கோரி புதுச்சேரியில் போராட்டம்



தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையின் உருவப் படத்தை கிழித்து தீயிட்டுக் கொளுத்தி புதுச்சேரி அ.தி.மு.கவினர் போராட்டம் நடத்தினர்.

அண்ணாமலையை குண்டர் தடுப்புச்சட்டத்தில் கைது செய்ய வேண்டும் எனவும் மாநில அ.தி.மு.க. செயலாளர் அன்பழகன் வலியுறுத்தியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளரும் தமிழக முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமியை தரக்குறைவாக பா.ஜ.க. மாநிலத்தலைவர் அண்ணாமலை பேசினார் என குறிப்பிட்டு புதுச்சேரி அ.தி.மு.க. தலைமை கழகம் முன்பு மாநிலச் செயலர் அன்பழகன் தலைமையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.

அப்போது அ.தி.மு.கவினர் அண்ணாமலையின் உருவப் படத்தை கிழித்து தீயிட்டுக் கொளுத்தினர். அண்ணாமலைக்கு எதிராக கோஷங்களையும் எழுப்பினர். அதைத் தொடர்ந்து அ.தி.மு.க. மாநிலச்செயலாளர் அன்பழகன் கூறுகையில்,

“அ.தி.மு.க. பொதுச்செயலாளரைப் பற்றி அவதூறாக பேச அண்ணாமலைக்கு எந்த அருகதையும் கிடையாது. அண்ணாமலையின் பேச்சு தொடர்ந்து சட்டம் – ஒழுங்கு சீர்குலைவை ஏற்படுத்தும் விதமாக இருக்கிறது.

மறைந்த ஒப்பற்ற தலைவர்களைப் பற்றியும் தற்போதைய பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் பற்றியும் தரம் தாழ்ந்து பேசுவதையே அண்ணாமலை வாடிக்கையாகக் கொண்டுள்ளார். ஒவ்வொரு முறையும் திட்டமிட்டு எதையாவது பேசி கலவரத்தைத் தூண்டும் இவரை குண்டா தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும்.” – என்றார்.



# உக்ரைன் மீது பாரிய வான்வழித் தாக்குதல்

## 7 பேர் உயிரிழப்பு

உக்ரைன் மீது ரஷ்யா பாரிய வான்வழித் தாக்குதலை நடத்தியுள்ளதாக உக்ரைன் விமானப்படைத் தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதலில் 7 பேர் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

ஏவுகணைகள் மற்றும் ஆளில்லா விமானங்கள் மூலம் இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த தாக்குதல்கள் காரணமாக மின்சார உட்கட்டமைப்பு முற்றாகப் பாதிக்கப்பட்டது.









# பாகிஸ்தானில் பெய்து வரும் கடும் மழையால் 22 பேர் பலி

பாகிஸ்தானின் – பலுசிஸ்தானில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக 11 குழந்தைகள் உட்பட 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதனால், பெரும் அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த அனர்த்தம் காரணமாக மேலும் 13 பேர் காயமடைந்துள்ளனர் என மாகாண பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மழையினால் 5 ஆயிரத்து 448 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 158 வீடுகள் சேதமடைந்துள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 102 ஏக்கர் விவசாய நிலங்களும், 35 கிலோமீற்றர் வீதிகளும் திடீர் வெள்ளத்தினால் அழிந்துள்ளன எனவும் கடும் மழை காரணமாக 7 பாலங்கள் சேதமடைந்துள்ளதாகவும், 131 விலங்குகள் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தோனேசியாவின் – ருவா கிராமத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை பெய்த கனமழையில் சிக்கி 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

# வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த ஆஸ்திரேலியா நடவடிக்கை





எதிர்வரும் 2025ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்வாங்கப்படும் வெளிநாட்டு மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அந்நாட்டு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதன்படி, புதிய ஆண்டிற்கு வெளிநாட்டு மாணவர் சேர்க்கையின் எண்ணிக்கையை 270,000 ஆக குறைக்கவுள்ளதாக ஆஸ்திரேலிய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அதன் போது, வெளிநாட்டு மாணவர்களின் வருகையால், நாட்டில் வீட்டு வாடகை விலையும் அதிகரித்துள்ளதாக அந்த நாட்டு அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், கொரோனா பெருந்தொற்றின் போது, மாணவர்களுக்கு பல்வேறு நிவாரணங்கள் வழங்கப்பட்ட போதிலும், தொற்றுநோய்க்குப் பின்னர் நாட்டின் பல்கலைக்கழகங்களில் சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 10 சதவீதம் அதிகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

2025 இல் பல்கலைக்கழகங்களுக்கு 15 வீதம் அதிகமான மாணவர்களும், தொழிற்கல்வி கல்லூரிகளுக்கு 20 வீதம் குறைவான மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் படி, சர்வதேச மாணவர்களின் எண்ணிக்கையை பல்கலைக்கழகங்களுக்கு 145,000 ஆகவும், திறன் பயிற்சித் துறைக்கு 95,000 ஆகவும் இருக்கும் என்று அவுஸ்திரேலிய கல்வி அமைச்சர் ஜேசன் கிளேர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், சர்வதேச மாணவர்களைக் கட்டுப்படுத்தும் எந்தவொரு நடவடிக்கையும் கல்வித் துறையை சேதப்படுத்தும் என்று பல்கலைக்கழகங்கள் பலமுறை எச்சரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# யாழில் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட களை – பூச்சி நாசினிகளைத் தேடி வேட்டை!

யாழ்.மாவட்டத்தில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட விவசாய இரசாயனங்கள், களை நாசினிகள், பூச்சி நாசினிகளின் விற்பனை அதிகரித்துள்ள நிலையில், மாவட்டம் முழுவதும் விவசாய இராசயன கட்டுப்பாட்டுப் பிரிவினர் அதிரடிச் சோதனை நடத்தியுள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட ஆபத்தான இரசாயனங்கள் அடங்கிய களை நாசினிகள் விற்பனை செய்யப்படுகின்றன எனக் கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சோதனை நடவடிக்கைகளின்போது ஆவரங்கால் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்று சோதனைக்குட்படுத்தப்பட்டு அங்கிருந்து சுமார் 4 மில்லியன் ரூபா பெறுமதியான சட்டவிரோத களை நாசினிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அந்த வர்த்தக நிலையத்திற்குச் சொந்தமான களஞ்சிய சாலையிலும் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. வர்த்தக நிலைய உரிமையாளர் மீது விவசாயத் திணைக்களத்தினால் வழக்கும் தொடரப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலும் திடீர் சோதனை நடத்தப்பட்டுள்ளதுடன், அங்கும் சட்டவிரோதமான களை நாசினி வியாபாரம் இடம்பெற்றமை கண்டுபிடிக்கப்பட்டு வர்த்தக நிலைய உரிமையாளருக்கு எதிராக சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வர்த்தக நிலைய உரிமையாளருக்கு நேற்றைய தினம் ஒன்றரை லட்சம் ரூபா தண்டம் விதித்து சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வெளிநாட்டிலிருந்து – குறிப்பாக இந்தியாவிலிருந்து – களை நாசினிகள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டு யாழில் விற்பனை செய்யப்படுகின்றது எனக் கூறப்பசுகின்றது.

இதனால் பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல் மண் வளமும் உடனடியாக பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. எனவே விவசாயிகள் இவ்வாறான சட்டவிரோத களை நாசினிகள் தொடர்பாக அவதானமாக இருக்கவேண்டும் எனவும், சட்டவிரோதமான களை நாசினி வியாபாரம் தொடர்பாக தகவல் அறிந்தால் விவசாய திணைக்களத்திற்கு தகவல் வழங்கவேண்டும் எனவும் மாவட்ட விவசாய திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் அஞ்சனா ஸ்ரீரங்கன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் சட்டவிரோத களை நாசினி வியாபாரத்தை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை தொடரும் எனவும், மாவட்டம் முழுவதும் அதிரடி சோதனைகள் நடத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.








# 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை

## ஹொறணைப் பிரதேசத்தில் சம்பவம்

ஹொறணை பிரதேசத்தில் 3 பிள்ளைகளின் தாய் ஒருவர் கொடூரமாக வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரதீபிகா குமாரி என்ற 36 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இரண்டு குடும்பங்களுக்கு இடையில் ஏற்பட்ட முறுகல் நிலைமை காரணமாக இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அயல் வீட்டிலுள்ள நபர் ஒருவர் தனது சகோதரனுடன் பிரதீபிகாவைச் சந்திப்பதற்காகக் கத்தியுடன் சென்றுள்ளார்.

திடீரென பிரதீபிகாவை அவர் கொடூரமாக வெட்டி கொலை செய்துள்ளார்.

இருவரையும் பொலிஸார் கைது செய்துள்ள நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்ட பெண்ணுக்கும் சந்தேக நபருக்கும் இடையில் அடிக்கடி வாக்குவாதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபரின் மனைவி இன்னொருவருடன் சென்று வாழ்ந்து வரும் நிலையில், அதற்கு கொலை செய்யப்பட்ட பெண் உதவினார் என சந்தேகநபர் குற்றம் சாட்டியுள்ளார்.

அதற்கு பழிவாங்கும் நோக்கிலேயே அந்தப் பெண்ணைவர் கொலை செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.



# ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் 1,155 முறைப்பாடுகள் பதிவு

ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் 1,155 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 495 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 605 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 04 முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 51 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

# மதுபான பாவனையினால் அதிகரிக்கும் உயிரிழப்புகள்



புகைத்தல் மற்றும் மதுபான பாவனையினால் நாளாந்தம் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

மதுபானம் மற்றும் போதைப் பொருள் தகவல் மத்திய நிலையம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் நாளாந்தம் 10இல் 8 பேர் தொற்றா நோய்களினால் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

புகைப்பிடித்தல் மற்றும் மதுபான பாவனையே இதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளதாக சுகாதாரத்துறையினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் நாட்டில் புகைத்தல் மற்றும் மதுபான பாவனைக்காக நாளொன்றில் சுமார் 121 கோடி ரூபா செலவிடப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

அத்துடன், கடந்த 2022ஆம் ஆண்டில் மது பாவனையினால் ஏற்பட்ட சுகாதார மற்றும் பொருளாதார இழப்புகள் 237 பில்லியன் ரூபா என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

# நெல் கொள்வனவு ஆரம்பம்



இந்த வருடத்திற்கான நெல் கொள்வனவு நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இதற்காக அரசாங்கம் 2,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக விவசாயிகளிடமிருந்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான நெல் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதன்படி ஒரு கிலோ கிராம் நாட்டரிசி நெல் 120 ரூபாவிற்கும், ஒரு கிலோ கிராம் கீரி சம்பா நெல் 130 ரூபாவிற்கும் கொள்முதல் செய்யப்படுகிறது.

# கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது முன்கூட்டி நேரம் ஒதுக்குதல் நிறுத்தம்

கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் போது முன்கூட்டி நேரம் ஒதுக்கும் முறைமை இன்று முதல் இடைநிறுத்தப்படுகின்றது.

இதற்கமைய ‘முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை’ என்ற முறை பின்பற்றப்படும் என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடவுச் சீட்டுப் புத்தகங்கள் கைவசம் குறைவாக இருப்பதால், மிக அவசரமாகத் தேவைப்படுவோர் மட்டுமே கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.





# விசேட தேவையுடைய வாக்காளர்கள் உதவியாளருடன் வாக்களிக்க அனுமதி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பார்வைக் குறைபாடு அல்லது விசேட தேவையுடையோர் பிறிதொரு உதவியாளருடன் வாக்களிப்பு நிலையத்திற்கு வருகைதர சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி சம்பந்தப்பட்ட உதவியாளர் 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும் எனவும், அவர் தேர்தலில் போட்டியிடாதவராக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த உதவியாளர் வேட்பாளர் ஒருவரின் அதிகாரமளிக்கப்பட்ட முகவராகவோ அல்லது பிரதேச முகவராகவோ அல்லது வாக்களிப்பு நிலையத்தின் முகவராகவோ செயற்படாத நபராகவுன் இருக்க வேண்டும்.


மேலும் உதவியாளர் எவ்வித உடல் பாதிப்பும் இல்லாதவராக இருக்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அந்த அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

மேற்படி உடற்தகுதிச் சான்றிதழைப் பெறுவதற்குத் தேவையான விண்ணப்பப்படிவங்களை மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம், பிரதேச செயலகம், கிராம உத்தியோகத்தர் அலுவலகம் அல்லது www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பார்வைக் குறைபாடு அல்லது விசேட தேவையுடைய நபர் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, அதனைப் பூர்த்தி செய்து கிராம உத்தியோகத்தரிடம் சமர்ப்பித்து அத்தாட்சிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதனையடுத்து அரச வைத்திய அதிகாரியிடம் அச்சான்றிதழைச் சமர்ப்பித்த பின்னர் வாக்காளரின் உடற்தகுதி பதிவு செய்யப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் பார்வைக் குறைபாடு அல்லது விசேட தேவையுடைய வாக்காளர்கள் உரிய உடற்தகுதி சான்றிதழை வாக்குச்சாவடிக்குக் கொண்டு வர வேண்டும் ந்த் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.




# சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகள் 2 அல்லது 3 வாரங்களில் வெளியாகும்

2023 ஆம் ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சை பெறுபேறுகளை 2 அல்லது 3 வாரங்களில் வெளியிட எதிர்பார்த்துள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பெறுபேறுகளை வெளியிடுவதற்குத் தேவையான அனைத்து பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன என சுசில் பிரேமஜயந்த குறிப்பிட்டுள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 28.08.2024




இன்று நடப்பவை அனைத்தும் சுமுகமாக இருக்கும்.உங்கள் இலக்குகள் நிறைவேறுவதைக் காண்பீர்கள்.உங்கள் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.இனிமையாகப் பேசி பகிர்ந்து கொள்வதன் மூலம் மற்றவர்களை எளிதில் புரிந்து கொள்ளலாம்.

உங்கள் பணியை சிறப்பாக ஆற்றி பிரகாசிப்பீர்கள். உங்கள் திறமைகளைப் பணியில் வெளிப்படுத்துவீர்கள். குறித்த நேரத்தில் பணிகளை முடிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு காணப்படும். உங்கள் உணர்வுகளை சிறப்பான முறையில் உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.உங்கள் குடும்பத்தில் நடக்கும் விசேஷம் பற்றி உங்கள் துணையுடன் விவாதிப்பீர்கள்.

எதிர்பாராத வகையில் இன்று உங்களுக்கு பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இவ்வகையான பண வரவு உங்களுக்கு மிகுந்த திருப்தியை அளிக்கும்.




இன்று முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள் அல்ல.இன்று தைரியம் குறைந்து காணப்படும். உங்கள் வளர்ச்சிக்காக மிகுந்த முயற்சி எடுக்க வேண்டியிருக்கும்.

நீங்கள் உங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம்.அதன் காரணமாக உங்கள் மேலதிகாரிகளுடன் சில அசந்தர்ப்பமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

உங்கள் துணையிடம் அன்பான உணர்வுகளை பகிர்ந்து கொள்ளமாட்டீர்கள். உங்கள் துணையிடம் உரையாடும் போது சில பிரச்சினைகள் உருவாகும்.

இன்று பண வளர்ச்சி சாதகமாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும்.

இன்று தோல்சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படலாம்.




இன்று சிறப்பான நாளாக அமையாது. இன்றைய நாளை திட்டமிட வேண்டும். இன்று சில சௌகரியங்களை இழக்க நேரலாம். இன்று முக்கியமான முடிவுகளை எடுக்க உகந்த நாள் அல்ல.

பணிச்சுமை அதிகமாகக் காணப்படலாம்.கூடுதல் வேலைகள் காரணமாக பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாமல் போகலாம்.

குடும்ப விஷயம் காரணமாக உங்கள் துணையுடன் சிறிய கருத்து மோதல்கள் காணப்படும். இதனால் தவறான புரிந்தணர்வு ஏற்பட நேரலாம் என்பதால் அதனை தவிர்ப்பது நல்லது.

இன்று வீணான செலவுகள் காணப்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பணத்தை பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பீர்கள்.

இன்று கண்களில் எரிச்சல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் இலக்குகளை முடிப்பதற்கான சாதகமான சூழ்நிலைகள் இன்று அமையாது.நீங்கள் நம்பிக்கையுடன் செயல்பட்டு உங்கள் சமயோஜித புத்தி மூலம் இன்றைய நாளில் உங்கள் இலட்சியங்களை அடைய வேண்டும்.

அதிக வேலை காரணமாக சோர்ந்து போவீர்கள். எனவே உங்கள் பணிகளை திட்டமிட்டு ஒழுங்கமைக்கவும்.அவ்வாறு செய்வதன் மூலம் நல்ல வளர்ச்சியைக் காண்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் நகைச்சுவையாக பேசுவதன் மூலம் நல்லிணக்கமான உறவு காணப்படும். இது நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பணத்தை கவனமுடன் கையாள வேண்டும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான பணம் உங்களிடம் காணப்படாது.




இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.உங்களுடைய பரந்த நோக்கு உங்கள் வளர்ச்சியை மேம்படுத்தும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.உங்கள் சக பணியாளர்களிடமிருந்து நல்ல ஆதரவு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். வெளியிடங்களுக்கு சென்று மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு அதிகரித்து காணப்படும். உங்களிடம் உள்ள பணம் உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும். இன்று உங்களிடம் காணப்படும் ஆற்றல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று சிறப்பான நாள். இன்று நீங்கள் உங்களைச் சுற்றி இருக்கும் வேலைகளில் மிகவும் மும்மரமாக காணப்படுவீர்கள். உங்கள் முயற்சிகளில் நற்பலன்களைப் பெற நீங்கள் இன்று புத்திசாலித்தனமாக செயல்பட வேண்டும்.

உங்கள் செயல்பாட்டின் மூலம் மறைந்திருக்கும் திறமைகள் வெளிப்படும்.அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.உங்கள் பணிகளை ஆற்றுவதற்கு இது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப்படையாக உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இது உங்கள் துணையுடன் நல்ல புரிந்தணர்வை ஏற்படுத்திக்கொள்ள உதவும்.

இன்று உங்கள் பொறுப்புகளை எதிர்கொள்ளும் அளவுக்கு உங்களிடம் பணம் காணப்படும்.




உங்கள் செயல்களை ஆற்றுவதில் இன்று சில தடங்கல்கள் ஏற்படும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும். நேர்மறையான போக்கின் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். உங்களுக்கு சாதகமாக பலன்கள் அமைய நீங்கள் திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் மகிழ்ச்சி கிடைக்கும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று செலவினங்கள் அதிகமாக காணப்படும். தேவையற்ற மற்றும் வீணான செலவுகளால் மனதில் கவலை ஏற்படும்.

இன்று அசௌகரியங்கள் காணப்படும். செரிமானப் பிரச்சினைகள் ஏற்படலாம். முதுகு வலிக்கு வாய்ப்புள்ளது.




இன்றைய தினம் நற்பலன்களை அளிக்கும் வகையில் சாதகமாக அமையாது. பலன்கள் மெதுவாகக் கிடைக்கும். இன்றைய தினம் அதிகமாக எதிர்பார்க்காதீர்கள். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் வெற்றி காணலாம்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணிகளை இன்று திட்டமிட்டு செய்ய வேண்டியது அவசியம்.

இன்று இறுக்கமான மனநிலையுடன் காணப்படுவீர்கள். இதை உங்கள் துணையிடம்வெளிப்படுத்துவீர்கள். இத்தகைய உணர்வுகளை வெளிப்படுத்துவது நல்லது.

இன்று விலைமதிப்பு மிக்க பொருள்களை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்கள். அவற்றை இழப்பதற்கான சாத்தியம் உள்ளது.பணஇழப்பிற்கான வாய்ப்பும் உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 28.08.2024




இன்று சுமுகமான நாளாக இருக்கும். முயற்சியின் மூலம் இன்றைய நாளை சாதகமான நாளாக ஆக்கிக் கொள்ளலாம். உங்களிடம் சிறந்த உறுதி காணப்படும்.

உங்கள் முயற்சி மூலம் இன்று பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையை நட்புடன் அணுகினால் உங்கள் இருவருக்குமான நெருக்கம் அதிகரிக்கும். நிதி வளர்ச்சி சீராக காணப்படும்.இன்று கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் திருப்தி அடைவீர்கள்.




இன்று சோம்பலான மனநிலையில் காணப்படுவீர்கள்.உங்கள் மனதில் தேவையற்ற குழப்பங்கள் காணப்படும். குழப்பங்களை ஒதுக்கித் தள்ளி நம்பிக்கையுடன்செயலாற்றுவது நன்மை தரும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் இன்று கிடைப்பது அரிது.

உங்களிடம் காணப்படும் குழப்பம் காரணமாக கசப்பான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இது உறவின் நல்லிணக்கத்தை பாதிக்கும். எனவே தவிர்ப்பது நல்லது.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்புகள் அதிகம். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

கண்களில் பாதிப்பு ஏற்படலாம். உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சாதாகமான நாளாக இருப்பதை காண்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தின் மூலம் இன்று நிறைய சாதிப்பீர்கள்.இன்று உங்கள் வளர்ச்சிக்கு உதவும் புதுமையான கருத்துக்களை கொண்டிருப்பீர்கள். அதற்கு முயற்சி எடுப்பீர்கள்.

பணியைப் பொறுத்தவரை திருப்திகரமான நிலை இருக்கும்.உங்கள்தரமான பணிகள் மேலதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறும்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்வீர்கள். இன்று சுமுகமான சூழ்நிலையும் நல்லிணக்கமும் காணப்படும்.

இன்று பணவரவு சிறப்பாக இருக்கும்.உங்கள் நிதி நிலைமை உங்களுக்கு திருப்திகரமாக இருக்கும். ஆன்மீக் காரியங்கள் உங்களுக்கு ஆறுதலைத் தரும்.




இன்று சிறப்புடன் செயலாற்ற நம்பிக்கையும் புத்துணரச்சியும் தேவை. தியானம் மற்றும் ஸ்லோகம் கேட்பதன் மூலம் இது சாத்தியம்.

பணிவளர்ச்சி சுமுகமாக இருக்காது. அதிகமான பணிகள் சவாலானதாக காணப்படும்.

உங்கள் குடும்பத்தில் இருக்கும் பிரச்சினை காரணமாக உங்களிடம் காணப்படும் அமைதியின்மையை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். உங்கள் துணையுடன் அமர்ந்து பேசி பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ளுங்கள்.

நிதி நிலைமையில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். பண இழப்புக்கான வாய்ப்புகளும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக காணப்படாது. தோள் வலி மற்றும் முதுகு வலி ஏற்படலாம்.





